ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2474/22 - 2026 පෙබරවාරි මස 03 වැනි අඟහරුවාදා - 2026.02.03

*2474/22 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

**உத்தேச சேற்று நண்டு வளர்ப்புத் திட்டம் - காரைநகர் தீவு, யாழ்ப்பாண மாவட்டம்**

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIAR)**

1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் விதிகளுக்கு இணங்க, யாழ்ப்பாணம், தனங்கிளப்பு, மன்னார் அதிவேக வீதி, நாவற்குழியில் அமைந்துள்ள பெனின்சுலா கொகோ தனியார் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட, யாழ்ப்பாண மாவட்டத்தின் காரைநகர் தீவில் உத்தேச சேற்று நண்டு வளர்ப்புத் திட்டத்திற்கான **சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIAR),** பொதுமக்களின் பரிசீலனைக்காக பின்வரும் இடங்களில் தினமும் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரை 2026.02.03 ஆம் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டுள்ளது. (வார இறுதி நாட்கள் மற்றும் அரச விடுமுறை தினங்கள் நீங்கலாக),

இதற்கு மேலதிகமாக, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.coastal.gov.lk ஊடாக அந்த அறிக்கையினை மூன்று மொழிகளிலும் பார்வையிடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், 4 ஆம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.
2. மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
3. தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை, பத்தரமுல்ல.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. பிரதேச செயலகம், காரைநகர்.

5. பிரதேச சபை, காரைநகர்.

6. மத்திய சுற்றாடல் அதிகார சபை, மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

7. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

8. மாகாண நீர்ப்பாசனத்திணைக்களம் ( வட மாகாண அலுவலகம்),யாழ்ப்பாணம்.

9. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், பிரதேச அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்.

இந்த உத்தேச திட்டத்தினால் சூழலுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றிய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை 2026.02.03 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்குள் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்கள் நீங்கலாக) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகின்றேன்.

**பேராசிரியர் பீ. பி. டர்னி பிரதீப் குமார,**
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி இலக்கம் : 011-2449754, 011-2387922, 011-2449197
பெக்ஸ் இலக்கம் : 011-2438005, 011-2472623
ஈ-மெயில் : dg.ccd.lk@gmail.com

EOG 02-0020